15 ஜனவரி 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 2 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **கல்வி**

# 2023 சீனப்புத்தாண்டில் குடும்பமும் கலாச்சாரமும்

2023 ஆம் ஆண்டின் சீனப்புத்தாண்டு ஜனவரி 22 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. கத்தோலிக்கர்களாகிய நாம் நற்கருணையைக் கொண்டாடும் ஞாயிற்றுக்கிழமையில் அந்த நாள் வருவதால் அது இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. புத்தாண்டின் முதல்நாள் மாலை சீனமக்கள் அவரவர்களின் குடும்ப இல்லங்களுக்குத் திரும்பி தங்களுடைய குடும்பத்தினரோடு இரவு உணவு உண்ண பெருமுயற்சி செய்கிறார்கள். இது கத்தோலிக்கர்களாக இருக்கும் சீனமக்களுக்கும் பொருந்தும்.

குடும்பத்தோடு ஒன்றுகூடும் அந்த உணவு அல்லது புத்தாண்டின் முதல்நாள் இரவு உணவு சீனர்களுக்கு ஆண்டின் மிகவும் முக்கியமான ஆடம்பரமான உணவாகும். முழு குடும்பமும் ஒன்றாக இணைந்து உணவு உண்பதும், ஒன்றாகக் கூடி சிரித்து, மகிழ்வதும் மிகமுக்கியமான ஒன்று. இந்த ஒன்றுகூடும் உணவின்போது கத்தோலிக்கர்கள், குடும்பங்களோடு ஒப்புரவு கொண்டு, பழைய விரோதங்களை மறந்து ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்துகொள்ள இது மிக முக்கியமான வாய்ப்பாகும்.

விவிலியத்திலும் நாம் இதுபோன்ற ஒரு ஒன்றுகூடுதல் விருந்து நிகழ்வைக் காணலாம். அதுதான் இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டப்போது ஏற்படுத்தப்பட்ட பாஸ்கா விருந்து. இந்த விருந்திற்குப் பின்னர் கடவுளின் மக்கள் அமைதியை அனுபவித்தனர். அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கப்பட்டு, புதிய விடுதலை வாழ்க்கையை வரவேற்றனர் (விடுதலைப் பயணம்: 12)

புதிய ஏற்பாட்டில், இயேசு தனது சீடர்களுடன் பாஸ்கா உணவைப் பகிர்ந்து நற்கருணையை ஏற்படுத்தினார். இயேசு நம்முடைய மீட்புக்காக சிலுவையில் மரித்து, அவரது இரத்தத்தால் நம் பாவங்களைக் கழுவினார். திருப்பலியில் நாம் இயேசுவின் தூய நற்கருனையைப் பெற்றுக்கொள்கிறோம். சாத்தானை வென்று, பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். நம் ஆன்மாவைக் காத்துக்கொள்கிறோம். இந்த நேரத்தில் தான் நாம் இயேசுவோடும் கடவுளின் அன்பு குடும்பத்தோடும் மீண்டும் ஒன்றிணைகிறோம். கிறிஸ்துவோடும், அனைத்து சகோதர சகோதரிகளோடும் ஒரு குடும்பமாகிறோம். அனைத்து நம்பிக்கையாளர்களோடும், மற்றும் இயேசுவுடனும் முடிவில்லா விண்ணக அரசில் மீண்டும் ஒன்றிணைய எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். எனவே ஒன்றுகூடும் விருந்து மேசையில் கிறிஸ்துவர்களாகிய நாமும் இயேசுவின் அன்பையும் தியாகத்தையும் நினைவுகூரவேண்டும்.



கிறிஸ்துவர்கள் அல்லாத குடும்ப உறுப்பினர்களோடு நாம் மீண்டும் இணையும்போது, கிறிஸ்துவின் அன்பை அங்கு வெளிப்படுத்தி வாழவேண்டும். மேலும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதற்காக கிறிஸ்துவர்கள் சீனமரபுகளின் உணர்வை மதிக்கிறார்கள் மற்றும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். இவ்வகையில் நாம் மண்ணுலகிற்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் இருக்கவேண்டும் என்ற இயேசுவின் கட்டளைக்கு உண்மையாக இருக்கிறோம். இதுவே இறைவனின் அழகியலுக்கும் கிறிஸ்துவ நம்பிக்கைக்கும் சாட்சி.

சீனப்புத்தாண்டின் முதல் நாளின் முக்கியமான செய்தி, புதுப்பித்தல். இது பூமியின் புத்துணர்ச்சி, புதிய ஆண்டின் முதல்நாளில் கத்தோலிக்கர்கள் ஆலயத்தில் ஒன்றுகூடி நன்றி செலுத்தி, நற்கருனையைக் கொண்டாடுகின்றார்கள். காணிக்கைகளை வழங்கும்போது, “ஆண்டவரே, இந்த புத்தாண்டு நாளில் எங்கள் காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளும், எங்கள் குடும்ப உறுப்பினர்களை ஒன்றிப்பிலும், அமைதியிலும், மகிழ்ச்சியிலும் ஆசீர்வதியும் என்றும், மன்றாடுகிறோம். திருப்பலியின் சபை இறைவேண்டலில் “ இந்தப் பருவகாலங்களின் மாற்றத்தின்வழியாக, கிறிஸ்துவில் நாங்கள் எங்களைப் புதுப்பித்துக்கொள்ள நீர்தாமே ஊக்குவிக்கின்றீர், எனவே, அவரோடு இணைந்து விண்ணக அரசை நோக்கி நாங்கள் பயணிக்கின்றோம்” என்று வேண்டுகிறோம்.

திருப்பலிக்குப் பின் முன்னோர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு மரியாதை செய்யும் சிறப்பு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கன்பூசியசை மதிக்கும் மற்றும் முன்னோர்களை நினைவுகூரும் பழக்கவழக்கங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இது நமது வழிபாட்டு கலாச்சாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே கத்தோலிக்கம் சீனாவில் வேகமாக வளரமுடிந்தது. பின்னர் இது சர்ச்சைகள் காரணமாக தடைசெய்யப்பட்டது. 1939 ஆம் ஆண்டு திருத்தந்தை 12 ஆம் பயஸ் இத்தடையை இரத்து செய்தார். நமது முன்னோர்களின் புகைப்படங்கள் அல்லது கல்வெட்டுகளுக்கு மரியாதை செய்வது நியாயமானது என்று அறிவித்து அதை அனுமதித்தார். பின்னர் 2 ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் (1962-1965) புதிய முறையில் திருச்சபை உருவாக்கப்பட்டது. நற்செய்தி மற்றும் கலாச்சார உறவை மீண்டும் மறு ஆய்வு செய்து புதிய பிரதிபலிப்புகள் மற்றும் போதனைகளுடன் நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்தை உணர்தல், மற்றும் முன்னோர்களை மதிக்கும் பழக்கவழக்கங்கள் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்டு, அது திருஅவை நடைமுறையின் ஒரு பகுதியாக மாறியது.

கத்தோலிக்கர்கள் இதுபோன்ற விளக்கத்தை தரும்போது, சீனக்கலாச்சாரத்தைப் பற்றி அறியாத கிறிஸ்துவர்கள் அல்லாத குடும்ப உறுப்பினர்கள் புரிந்துகொள்ளும் வகையில் நாம் அவற்றை எடுத்துக்கூறவேண்டும். **முன்னோர்களுக்கு மரியாதை தருவது, நம்முடைய நற்செய்தி கூறும் பேறுபெற்றோரின் குணம். கலாச்சாரம் பாரம்பரியம் மற்றும் நம்பிக்கையின் கலவையானது நம்முடைய நம்பிக்கையை இன்னும் வலுப்படுத்துகிறது.** நம் முன்னோர்களுக்கு தூபம் இடுவதும், மலர்களைக் காணிக்கையாக்குவதும், உருவ வழிபாடு அல்ல; மாறாக அது நம் மரியாதையைக் காட்டுகிறது. நமது நம்பிக்கை கடவுளிடமே. சீனக் கலாச்சாரத்தை நாம் உள்ளூர் ஆலய வழிபாட்டில் ஈடுபடுத்துவது மனிதர்களாகிய நம்மிடையே நாம் காட்டும் பரஸ்பர மரியாதை. இருந்தபோதும் செல்வத்தின் கடவுளை வணங்குவது, அதற்கான காணிக்கைகள் தருவது இவையெல்லாம் நாம் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும்.

இந்தச் சீனப்புத்தாண்டில் சில கலாச்சார நடைமுறைகள், செயல்பாடுகளை எதிர்க்கும் கிறிஸ்துவர்களுக்கு, ஆசீரையும், அன்பையும் பரிமாறிக்கொள்வதற்கும் முன்னோர்களின் ஆசீரைப் பெற்றுக்கொள்ளவும் இது தகுந்த நேரம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

**நரை திரண்டவருக்குமுன் எழுந்து நில். முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட; உன் கடவுளுக்கு அஞ்சி வாழ்; நானே ஆண்டவர்.**

(லேவியர்: 19:32)

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா 49: 3, 5-6

திருப்பாடல் 40: 2,4, 7-10

1 கொரிந்தியர் 1: 1-3

யோவான் 1: 29-34

*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 03/2023